# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2019ம் ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் விகாரி வருடம் சித்திரை 17ம் நாள் புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**
**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**சிவகங்கை நகராட்சி.**

# <u>பொருள்கள்</u>

**1.**சிவகஙகை நகராட்சி ஆணையாளர் அவர்களின் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:**396

**தீர்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

2. சிவகஙகை நகராட்சி பொறியாளர் அவர்களின் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:**397

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

3. சிவகஙகை நகராசிக்குட்பட்ட வார்டு எண்..12, பிள்ளைவயல்காளியம்மன் கோவில் அருகில், பாரளுமன்ற உறுப்பினர் (மக்களவை) உள்ளூர் அபிவிருத்தி திட்டம் 2018–19ன் கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம் அமைக்கும் பணிக்கு 05.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரா் பெயர்** | **விலை விகிதம்** |
|---|---|---|
| 1. | திரு. K.முருகேசன், ஒப்பந்தகாரா், சிவகஙகை | 0.63% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு. R.சோனைமுத்து, ஒப்பந்தகாரா், சிவகஙகை | 2.64% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.63% குறைவான விலை விகிதம் வழஙகிய ஒப்பந்ததாரா் திரு. K.முருகேசன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் ஏற்கலாம்.

**தீர்மான எண்:**398

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

4. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்..13590/ஜே3, நாள்..23.12.2010ன் படியும், அரசாணை எண்..2(டி)எண்..37, நாள்..14.05.99ன் படியும் 2019–20ம் ஆண்டிற்கு இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு (ஆண், பெண் மொத்தம் 83 துப்புரவு பணியாளர்) 1 ஜோடி காலணியும், 4 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு 1 ஜோடி காலணியும் மற்றும் 7 ஓட்டுநர்களுக்கு 1 செட் ஷீ அரசு நிறுவனமான Tamil Nadu Khadi & Village Industries Board சிவகஙகையில் வாஙகி வழஙக ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.55000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண்:**399

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**5.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண்..92 நாள்..03.07.2007ன் படி நகராட்சிக்குச் சொந்தமான கடைகள் மற்றும் இதர இனஙகளுக்கு மூன்று ஆண்டுகளை கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைவதின் பேரில் அக்குத்தகை இனஙகளை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படலாம் என்றும் ஒவ்வொரு முறை புதுப்பிக்கப்படும் போது 15 விழுக்காடு குத்தகை தொகையை உயர்த்தப்பட வேண்டும் என்ற அரசாணையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் 1. திரு.எம்.எம்.ராஜா த/பெ.முனியாண்டி, 2. சூரிய நாராயணன் த/பெ.சுவாமிநாதன் 3. திரு.சேன் த/பெ.சுவாமிநாதன் 4. எம்.முத்துராமலிஙகம் 5. சேன் த/பெ.சுவாமிநாதன் 6.குமார் த/பெ.வைரமணி ஆகிய ஆறு நபர்கள் பெற்ற தடையுத்தரவு வழக்கு எண்..1102 முதல் 1107/2014 எண்ணிட்ட ஆறு வழக்குகளில் நகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்வதும், வக்காலத்து படிவம் மற்றும் வழக்கிற்கு தேவையான பத்திவாரி அறிக்கை தயார் செய்து வழக்குகளுக்கும் சேர்த்து ரூ.45,000/– (நாற்பத்தி ஐந்தாயிரம்) மட்டும் நகராட்சி வழக்கறிஞர் திரு. ஜே.லாரன்ஸ் அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

வழக்குக் கட்டணம் ரூ.45,000/–(நாற்பத்தி ஐந்தாயிரம்) மட்டும் நகராட்சி வழக்கறிஞர் திரு.ஜே.லாரன்ஸ் வழஙக மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மான எண்:**400

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி